# பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு

## தேயிலை சிறு தோட்டங்கள் அபிவிருத்தி அதிகாரசபை

# பதவி வெற்றிடங்கள்

### பிரதி பொது முகாமையாளர் (அபிவிருத்தி) – பதவி 01

1. **சேவைத் தரம் -** சிரேஷ்ட முகாமைத்துவ சேவைத் தரம் - (HM 1-1)

2. **தகைமைகள் -** வெளிவாரி விண்ணப்பதாரர்களின் ஆட்சேர்ப்பு (கீழுள்ள 1 அல்லது 2)

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம், விவசாய, பெருந்தோட்ட முகாமைத்துவம், வர்த்தக நிர்வாகம்/ முகாமைத்துவம் தொடர்பில் ஆரம்ப பட்டப்படிப்பை பெற்றிருத்தல்.

அத்துடன்

பதவிக்குத் தொடர்புடைய விடயப் பரப்புக்கு பொருந்துகின்ற, முதுமாணி பட்டம் (Masters) ஒன்றைப் பெற்றிருத்தல்/ அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்முறை நிறுவனம் ஒன்றில் அது சார்ந்த அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்.

மற்றும்

அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, சட்டரீதியான நிறுவனம் அல்லது தனியார் நிறுவனம் ஒன்றில் விவசாய அபிவிருத்தி/ விவசாய பரவலாக்கல் செயற்பாடுகள் தொடர்பில் முகாமைத்துவ தரத்திலான பதவி ஒன்றில் குறைந்தது பதினைந்து (15) ஆண்டுகள் அனுபவம் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(2) பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்புக்கு பொருந்தும் அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்முறை நிறுவனம் ஒன்றில் முழு அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்.

மற்றும்

அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, சட்டரீதியான நிறுவனம் அல்லது தனியார் நிறுவனம் ஒன்றில் விவசாய அபிவிருத்தி/ விவசாய பரவலாக்கல் செயற்பாடுகள் தொடர்பில் முகாமைத்துவ தரத்திலான பதவி ஒன்றில் குறைந்தது பதினைந்து (15) ஆண்டுகள் அனுபவம் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)**

(1) மேற் குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமையை பூர்த்தி செய்திருத்தல்.

(2) தேயிலை சிறு தோட்டங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் அபிவிருத்தி/ பரவலாக்கல் செயற்பாடுகள் தொடர்பில் முகாமைத்துவம் MM 1-1 சேவை தரத்தில் 1ஆவது தரத்தின் பதவி ஒன்றில் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவை காலம் ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

3. **சம்பள அளவு :**

இந்தப் பதவி முகாமைத்துவ சேவை சுற்றுநிருப இலக்கம் 01/2025 இற்கு அமைய ரூபா 140,640 – 15 x 4,100 = 202,140/- (மாதாந்தம்) சம்பள அளவுக்கு உரித்தானதாகும். இது தவிர அரசின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

4. **வயது :**

35 வயதுக்கு குறையாத மற்றும் 55 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். (உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.)

5. **ஆட்சேர்ப்பு முறை** (அ) கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை மூலம் வெளிவாரி விண்ணப்பதாரர்கள் ஆட்சேர்ப்பு

(ஆ) கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை மூலம் உள்ளக விண்ணப்பதாரர்கள் ஆட்சேர்ப்பு

**கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை**

| | | | |
|---|---|---|---|
| 01. | தொடர்புடைய மேலதிக அனுபவம் | - | 30 புள்ளி |
| 02. | தொடர்புடைய மேலதிக கல்வி/ தொழில் தகைமை | - | 30 புள்ளி |
| 03. | ஏனைய செயற்றிறன் மற்றும் தேர்ச்சி | - | 15 புள்ளி |
| 04. | நேர்முகப்பரீட்சையில் செயற்றிறன் | - | 25 புள்ளி |
| | மொத்த புள்ளிகள் எண்ணிக்கை | - | 100 புள்ளிகள் |

நேர்முகப்பரீட்சையில் அதிக புள்ளிகளை பெற்றவர்கள் இடையே தேர்ச்சி வரிசைக்கு அமைய தேர்வு மேற்கொள்ளப்படும்.

### தேயிலை பரிசோதகர்/ திட்ட அதிகாரி – வெற்றிடங்கள் 25

01. **சேவைத் தரம் -** முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) சேவைத் தரம் - (MA 2-3 III)

02. **தகைமைகள் -**

**(அ) வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

விவசாயம், பெருந்தோட்ட முகாமைத்துவம் அல்லது பெருந்தோட்ட பரவலாக்கல் முகாமைத்துவம் தொடர்பில் மூன்றாம் நிலைக்கல்வி தொழில் கல்வி ஆணைக்குழுவினால் வழங்கப்படும் தேசிய தொழில் தேர்ச்சி (NVQ) ஐந்தாவது (05) தரத்துக்கு குறையாத தேர்ச்சி சான்றிதழை பெற்றிருத்தல்.

**(ஆ) உள்ளக விண்ணப்பதாரர்கள்**

மேலுள்ள வெளிவாரி விண்ணப்பதாரர்களை ஆட்சேர்ப்பதற்கு தொடர்புடைய தகைமைகள்

03. **சம்பள அளவு :**

இந்தப் பதவி முகாமைத்துவ சேவை சுற்றுநிருப இலக்கம் 01/2025 இற்கு அமைய ரூபா 52,700 – 10 x 800 11 x 1190 – 10 x 1320 – 10 x 1350 = 100,490/- (மாதாந்தம்) சம்பள அளவுக்கு உரித்தானதாகும். இது தவிர அரசின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

04. **வயது :**

8 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். (உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.)

05. **ஆட்சேர்ப்பு முறை :**

நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்பட்டவாறு விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின் இந்தப் பதவிக்கு தொடர்புடைய எழுத்துமூல போட்டிப் பரீட்சை ஒன்று மற்றும் நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் சபை ஒன்றினால் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றின் முடிவு அடிப்படையில் தேர்வு செய்யப்படுவதன் மூலம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

**எழுத்துமூல போட்டிப் பரீட்சை**

முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) சேவை தரத்திற்கு தொடர்புடைய பதவிக்காக ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அமைவான எழுத்துமூல பரீட்சைக்கான நடைமுறை ஒன்று கீழ் தரப்பட்டுள்ளது.

**எழுத்துமூல பரீட்சைக்கான முறை**

**வினாத்தாள்கள் இரண்டாகும்.**

**Iஆவது தாள்:** காலம் 01 மணித்தியாலம்.

50 பல் தேர்வு கேள்விகள் அடங்கும்.

பாடம்: பொது அறிவு, அறிவுச் சோதனை, விவசாய கோட்பாடுகள், தேயிலை தொழில்நுட்பம் தேயிலை தொழில்துறை சார்ந்த விடயங்கள்

**புள்ளிகள்:** 50 கேள்விகள் x 2 புள்ளிகள் வீதம் 100

**II ஆவது தாள்:** 1 ½ மணித்தியாலம்.

பாடம்: விவசாய கோட்பாடு, தேயிலை துறை தொடர்பான விடயங்கள், தேயிலை தொழில்துறை மற்றும் தொழில்நுட்பம், விவசாய பரவலாக்கம் மற்றும் தொடர்பாடல்

**கேள்வி மற்றும் புள்ளிகள்**

(i) பாகம்

சிறிய பதில் எதிர்பார்க்கும் 6 கேள்விகளுக்கு பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

6 கேள்விகள் x 05 புள்ளிகள் = 30 புள்ளிகள்

(ii) பாகம்

7 கட்டுரை பதில்கள்.

அதில் 5 இற்கு பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

5 கேள்விகள் x 14 புள்ளிகள் = 70 புள்ளிகள்
மொத்தம் = 100 புள்ளிகள்

சித்தி பெறுவதற்கு ஒவ்வொரு வினாத்தால்களில் குறைந்தது 40% உம் வினாத்தாள் இரண்டுக்காக மொத்தமாக குறைந்தது 50% உம் பெறுதல் வேண்டும்.

**கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை**

| | | | |
|---|---|---|---|
| 05. | தொடர்புடைய மேலதிக அனுபவம் | - | 30 புள்ளி |
| 06. | தொடர்புடைய மேலதிக கல்வி/ தொழில் தகைமை | - | 30 புள்ளி |
| 07. | ஏனைய செயற்றிறன் மற்றும் தேர்ச்சி | - | 15 புள்ளி |
| 08. | நேர்முகப்பரீட்சையில் காண்பிக்கும் திறமை | - | 25 புள்ளி |
| | மொத்த புள்ளிகளின் எண்ணிக்கை | - | 100 புள்ளிகள் |

எழுத்துமூல போட்டிப்பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் இணைக்கப்படும்போது போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் கூட்டுத்தொகை 60% மற்றும் நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட 40% புள்ளிகள் என பெற்று தேர்ச்சி வரிசைக்கு அமைய தேர்வு மேற்கொள்ளப்படும்.

06. வேறு – அனைத்து ஆட்சேர்ப்பு தொடர்பிலும் நிறுவன செயற்பாட்டு நடைமுறை கோவை ஏற்பாடு பொருந்தும்.

1958 இன் 15 ஆம் இலக்கம் கொண்ட ஊழியர் சேமலாப நிதி சட்டம் அல்லது அந்தச் சட்டத்தின் கீழ் உள்ள ஊழியர்களின் வேறு சேமலாப நிதியம் ஒன்றுக்கு அல்லது தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர் மூலம் தேயிலை சிறு தோட்டங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் பணியாற்றும் முழுமையான காலத்தில் அவரின் முழு மாதச் சம்பளத்தில் 10% இற்கு குறையாத தொகை ஒன்று வழங்கப்படும் என்பதோடு அதிகாரசபையினால் 15% இற்கு குறையாத தொகை ஒன்று அங்கத்துவ தொகையாக செலுத்தப்படும்.

இது தவிர ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்காக 3% அதிகாரசபையினால் செலுத்தப்படும்.

07. விண்ணப்பங்கள் - விண்ணப்பதாரர்கள் அனைத்து விபரங்களுடன் தமது விண்ணப்பத்தை பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ், அனுபவத்தை காண்பிக்கும் சான்றிதழ் மற்றும் வேறு தேர்ச்சி மற்றும் செயற்றிறன் சான்றிதழ் ஆகிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களை இடுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த பதவியை குறிப்பிடுதல் வேண்டும். அரச/ அரச கூட்டுத்தாபனம்/ சட்டரீதியான சபைகளில் சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது நிறுவன தலைவர் ஊடாக அவரது பரிந்துரையுடன் தமது விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

08. விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதி – 2026 மார்ச் மாதம் 10 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்ட நபருக்கு கிடைக்குமாறு அனுப்ப வேண்டும்.

**தலைவர்**
**தேயிலை சிறு தோட்டங்கள் அபிவிருத்தி அதிகாரசபை**
**இலக்கம் 70, பாராளுமன்ற வீதி,**
**பெலவத்த, பத்தரமுல்லை.**